REPORTING SECTION (Council)

1984 பிப்ரவரி 15]

டாக்டர் இரா. சனார்த்தனம் : வெளி நாடுகளில் விற்பனை நிலையங்களைத் துவக்குவது என்றால், சிரமங்கள் இருக்கின்றன. ஆனால் அதே நேரத்தில் வெளி நாடுகளில் விற்பனையாளர்களை நியமிக்கலாம் அல்லவா? அதோடு கூட வெளி நாடுகளில் எந்தமாதிரி நிறங்களை விரும்புகிறார்கள் என்பதை அறிந்து அதற்கேற்ப துணிகளைத் தயாரித்து விற்பனை செய்வதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : மற்ற நாடுகளில் உள்ள மக்கள் எதை எதை விரும்புகிறார்கள் என்பதை அறிந்துகொள்வதற்காக முன்னாள் கைத்தறி அமைச்சர், கோவாப்டெக்ஸ் தலைவர், இயக்குநர் மற்றும் தொழில் நுட்ப அதிகாரி இவர்கள் எல்லாம் வெளி நாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறார்கள். அவர்கள் செய்துள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டமாதிரி, இப்போதே தனியார் மூலமாக, ஏஜென்சி மூலமாக மற்ற நாடுகளுக்கு அனுப்பிக்கொண்டு தான் இருக்கிறோம். ஆனால் அரசின் சார்பில் அவ்வாறு அனுப்புவதில்லை.

தஞ்சாவூர் மாவட்டத்தில் காகிதத் தொழிற்சாலை.

*** 18. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) :** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கிழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் காகிதத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : (அ) இல்லை.

(இ) ஏற்கெனவே சுமார் 200 கோடி ரூபாய் செலவில் புகளூரில் ஆண்டுக்கு 50 ஆயிரம் டன் செய்தித் தாளும், 40 ஆயிரம் டன் காகிதமும் தயாரிக்கின்ற தொழிற்சாலை ஒன்று உருவாகியுள்ளது. அந்தத் தொழிற்சாலை இந்த ஆண்டு டிசம்பரில் உற்பத்தியைத் துவங்கும். அது தவிர தற்போது புதிதாக காகித ஆலை ஏற்படுத்துகிற திட்டம் ஒன்றும் அரசின் பரிசிலனையில் இல்லை.

[1984 பிப்ரவரி 15

டாக்டர் இரா. சனார்த்தனம் : முதல் காகித உற்பத்தித் தொழிற்சாலையின் உற்பத்தி பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். மேற்கொண்டு ஆண்டுக்காண்டு எவ்வளவு உற்பத்தி அதிகரிக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : இப்போது தான் கட்டுமானப் பணி நடந்து வருகிறது. முதல் உற்பத்தி 1984 டிசம்பர் மாதத்தில் தொடங்க இருக்கிறது. கெப்பாசிட்டி அளவு ஆண்டுக்கு 50 ஆயிரம் டன் செய்தித் தாளும், அது போல் 40 ஆயிரம் டன் எழுது தாளும் ஆகும். இது தான் அதனுடைய 'மாக்சிமம் கெப்பாசிட்டி'.

சீர்திருத்தப்பள்ளிகள்.

*19. **வினா—திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் இளங்குற்றவாளிகளுக்கான சீர்திருத்தப் பள்ளிகள் எந்தெந்த இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன?

(இ) அப்பள்ளிகளில் சேர்க்கப்படும் இளங்குற்றவாளிகளின் வயது வரம்பு என்ன?

(உ) இளங்குற்றவாளிகளின் பிற்கால நல்வாழ்வுக்கு அவை எவ்விதத்தில் பயன்படுகின்றன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) மற்றும் (இ) ஆம். விரிவான அறிக்கை @ அவை முன்பு வைக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9.50)

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நான் கேள்வி கேட்டது 'பார்ஸ்ட்டல் பள்ளிகளைப்பற்றியதாகும். ஆனால் இங்கே பதில் சொல்லப்பட்டிருப்பது ஜூனியர் மற்றும் சீனியர் சர்ட்டிபைடு பள்ளிகளைப் பற்றியதாக இருக்கிறது. இருந்தாலும் பரவாயில்லை. இந்தப் பள்ளிகளில் பயின்று பயிற்சி பெற்றவர்களில் சிறப்பான முறையில் இருப்பவர்கள் எத்தனை பேர்? அவர்களில் சிலரையாவது இங்கே குறிப்பிட முடியுமா?

@ 115–117 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.